**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 378/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திருமதி. இராஜம்மாள் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2022.

நான் பூலத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும் தெரியும் உறவினர்கள். என்னுடைய வீட்டிற்கு அருகில் லெட்சுமி மற்றும் சரஸ்வதி அண்ணன் அருணாச்சலத்திடமிருந்து நிலம் வாங்கி 15 வருடங்கள் ஆகிறது. மேற்படி லெட்சுமி, சரஸ்வதி நிலத்தை தங்களுக்கு சொந்தம் என்றும் மேற்படி நிலம் எங்களது அம்மா பெயரில் உள்ளதாக சொன்னார்கள். கடந்த 24.08.2017 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில் நான் வாங்கிய நிலத்தில் வானம் தோண்டி கொண்டிருந்த போது எதிரிகள் நான் வாங்கிய நிலத்தை தங்களுக்கு சொந்தம் என்று பிரச்சனை செய்தார்கள் நான் கேட்ட போது என்னை கன்னத்திலும், முதுகிலும் அடித்து தள்ளினார்கள் அப்போது நான் வானம் தோண்டிய குழியில் விழுந்துவிட்டேன். அதனால், எனக்கு வலது முழங்கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எதிரிகள் என்னை அவதூறான வார்த்தைகளால் ஏசினார்கள்.

எனது மகன் இசக்கியப்பன் என்னை மேற்படி குழியில் இருந்து தூக்கிவிட்டு எதிரிகளை சத்தம் போட்டார். பின்னர் நான் மூன்றடைப்பு காவல்நிலையத்திற்கு சென்று இது குறித்து புகார் அளித்தேன். பின்னர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். வழக்கு சம்பவத்தை சரவணகுமார், சிவசெல்வி பார்த்து விலக்கிவிட்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இடபிரச்சனை சம்பந்தமாக நான்குநேரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பிரச்சனைக்குரிய இடம் எதிரிகளின் அம்மா பெயரில் தான் உள்ளது என்ற விபரம் தெரியுமா

என்றால் மேற்படி நிலம் எதிரிகளின் அம்மா பெயரில் இல்லை. பிரச்சனைகுரிய இடத்தை அருணாச்சலம் என்பவர் எனது கணவருக்கு 1 செண்ட் நிலம் தான் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல 6 செண்ட் நிலம் எனது கணவருக்கு எழுதி கொடுத்துள்ளார் பட்டாவும் உள்ளது. மேற்படி நிலத்தை அருணாச்சலம் என்பவர் பதிவு செய்யாத 10 ரூபாய் பத்திரத்தில் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல பத்திர அலுவலகத்தில் வைத்து தான் எழுதி கொடுத்தார்.

ஏற்கனவே, மேற்படி இடம் பிரச்சனைகுரிய இடம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு மூன்றடைப்பு காவல்நிலையத்தில் மாறிமாறி புகார் அளித்தீர்களா என்றால் சரியல்ல நாங்கள் தான் புகார் அளித்தோம். சம்பவம் இடத்தில் சம்பவ நேரத்தில் எங்கள் பக்கத்து வீட்டுகாரான சிவசெல்வி மற்றும் சரவணன் இருந்தார்கள். சம்பவ இடத்தில் வெளியூர் ஆட்கள் சுமார் 4 நபர்கள் வேலை பார்த்து கொண்டிருந்தார்கள். மேற்படி அ.சா.ஆ1. புகாரில் சம்பவ இடத்தில் வெேலை செய்த நபர்களின் பெயர் மற்றும் விலாசத்தை குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்தின் போது சரஸ்வதி அம்மாள் 100 நாள் வேலை திட்டத்தில் அருகில் வேலை பார்த்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல சம்பவ இடத்திற்கு அருகில் தான் நின்று கொண்டிருந்தார்கள். சம்பவம் நடந்த போது வேலையாட்கள் வானம் தோண்டும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சத்தம் கேட்டு தான் எனது அண்ணன் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு சென்றேன். அண்ணன் வீட்டிலிருந்து யாராவது உடன் வந்தார்களா என்றால் அண்ணன் வீட்டில் அனைவரும் பாம்பேயில் உள்ளார்கள்.

எதிரிகள் எத்தனை மணிக்கு வந்து வாக்குவாதம் செய்தார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் நான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன் எதிரிகள் வரும் போது மணி சுமார் 12.00 மணி இருக்கும். சத்தம் கேட்டவுடன் நான் மட்டும் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றவுடன் எதிரிகளை பார்த்து சத்தம் போட்டிற்கள் என்றால் எதிரிகள் முதலில் என்னை பார்த்து சத்தம் போட்டார்கள் அதனால் நான் திரும்ப சத்தம் போட்டேன்.

சம்பவ இடத்தில் சுமார் 5 அடி அளவில் வானம் தோண்டி இருப்பார்கள். நான் வாக்குவாதம் செய்த இடத்திற்கும் வானம் தோண்டிய இடத்திற்கும் இடையே சுமார் 20 அடி தூரம் இருக்கும் என்றால் வானம் தோண்டிய இடத்தில் அருகாமையில் தான் வாக்குவாதம் ஏற்பட்டது. வேலையாட்கள் வாக்குவாதத்தின் போது சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் எதிரிகள் சத்தம் போட்டவுடன் சம்பவ இடத்திலிருந்து சென்றுவிட்டார்கள். நான் சம்பவ இடத்தில் ஏற்றபட்ட பிரச்சனைக்கு பின்னர் வானம் தோண்டிய குழியில் விழுந்த விபரத்தை எனது மகனுக்கு யார் தகவல் கூறினார்கள் என்றால் எனது மகன் அப்போது சம்பவ இடத்திற்கு வந்தான் அதனால் அவருக்கு தெரியும்.

சம்பவ இடத்திற்கு பிரச்சனை நடந்து கொண்டிருந்த போது மூன்றடைப்பு காவல்நிலையத்திலிருந்து 2 போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் நாங்கள் சென்று புகார் அளித்த பின்பு தான் காவல்துறையினர் வந்தார்கள். போலிசார் ஒரு ஆட்டோ மூலம் சம்பவ இடத்திற்கு வந்து எதிரிகளை ஒரு பெண் காவலர் மூலம் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றால் முதலில் போலிசார் எதிரிகளை அழைத்தார்கள் வரவில்லை அதனால் ஆட்டோவில் அழைத்து சென்றார்கள்.

எதிரிகளை போலிசார் சம்பவ இடத்திலிருந்து அழைத்து செல்லும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான் நான் அப்போது காவல்நிலையத்தில் இருந்தேன். காவல்நிலையத்திற்கு என்னுடன் என் மகன் வந்தார். புகார் மனுவை அ.சா.ஆ.1 நானோ எனது

மகனோ எழுதவில்லை என்றால் சரியல்ல எனது மகன் தான் எழுதினான். அ.சா.ஆ.1 புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் தெரியும்.

காவல்நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல மருத்துவ நமூனா கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் அதன் பேரில் தான் மருத்துவமனை சென்றோம். சம்பவ சமயத்தின் போது எனது மகன் பி.இ படித்து கொண்டு கல்லூரியில் இருந்தார் என்றால் சரியல்ல என்னை எனது மகன் சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் அழைத்து சென்றான். பிரச்சனைகுறிய இடத்தில் வானம் தோண்டிய இடத்தில் வைத்து எதிரிகள் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரியல்ல வானம் தோண்டிய இடத்திற்கு அருகில் தான் பிரச்சனை செய்தார்கள்.

நான் காலையிலிருந்து வானம் தோண்டிய இடத்தில் நின்றுகொண்டிருந்த போது தவறுதலாக கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல நான் காலையில் வானம் தோண்டிய இடத்தில் நிற்கவில்லை சத்தம் கேட்டு தான் சென்றேன். மேற்படி பிரச்சனைகுறிய இடத்திற்கு அருகில் முருகன் என்பவரும் 6 சென்ட் நிலம் வாங்கியுள்ளார். முருகன் என்பவர் பிரச்சனைகுறிய இடத்தில் வழக்கு நடந்து வருவதால் முருகன் அந்த இடத்திற்கு வரவில்லை என்றால் நாங்கள் வாங்கிய இடத்திற்கு முருகன் வரவில்லை.

காவல்நிலையத்திலிருந்து நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லும் போது சுமார் 4 மணி இருக்கும். மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது காயம் இல்லை என்பதால் மருத்துவர் சீட் போட்டு கொடுத்தார் என்றால் எனக்கு காயம் இருந்தது. மூன்றடைப்பு காவல்நியைலத்திலிருந்து நான்குநேரி அரசு மருத்துவமனை செல்ல சுமார் அரை மணி நேரம் ஆகும்.

எதிரிகள் மீது முன்விரோதம் இருந்தது அவர்களை பழிவாங்கும் எண்ணத்தில் இந்த வழக்கை பொய்யாக அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. போலிசார் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல டைப் செய்த தாளில் தான் கையெழுத்து செய்து கொடுத்தேன். எதிரிகள் உங்கள் இடத்தில் அத்துமீறி நுழைந்து கொலைமிரட்டல் விடுத்தது பொய் என்று சொன்னால் சரியல்ல.

அ.சா.ஆ.1 புகாரில் என்னென்ன கெட்ட வார்த்தையில் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டதா என்றால் எழுதினார்களா என்று எனக்கு தெரியாது. வழக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**